

Vol.25 | No. 1 | January 2021

The Official Organ of the Diocese of Thuckalay


# இறையருள்







**21.12.2020**
**MANJALUMOODU CHURCH CONSECRATION AND KODIMARAM BLESSING**





**KUZHINJAVILAI MISSION, MALAICODE CHRISTMAS GATHERING**

**ST JOSEPH MISSION, SACRAMENTS OF INITIATION O KOVILPATTI, VIRUTHUNAGAR**





2 -12-2020
PARISH VISIT & HOLY QURBANA
PALLIKONAM

3 -12-2020
PASTORAL COUNCIL
SANGAMAM





6 -12-2020
TCYM FORANE INAUGURATION
KALIYAL

6-12-2020
FIRST HOLY COMMUNION
PARAICODE





8-12-2020
PARISH VISIT & HOLY QURBANA
KILLIYOOR

12-12-2020, PRE CHRISTMAS
GATHERING- HEADS OF THE
INSTITUTIONS- SANGAMAM





12-12-2020, CHRISTMAS GATHERING
KOZHIPORVILAI STAFF

10-12-2020, HOLY QURBANA
KUDUKKACHIVILAI

The Official Organ of the Diocese of Thuckalay
Volume 25 No :01 January 2021



# இறையருள்
# IRAIARUL

## உள்ளே...

| | |
|---|---|
| Bishop's Message | 02 |
| ஆயர் திருமுகம் | 06 |
| மறைக்கல்வி | 09 |
| சிறுமலர் மிஷன்லீக் | 09 |
| குழந்தை ஈசோ இயக்கம் | 10 |
| இளையோர் இயக்கம் | 11 |
| இல்வாழ்வு இயக்கம் | 14 |
| வின்சென்ட்-தே-பவுல் சங்கம் | 16 |
| KKSSS | 21 |
| மறைவட்டச் செய்திகள் | 25 |
| சூரியா செய்திகள் | 29 |
| பொதுநிலையினர் பேரவை | 30 |
| Birthdays & Feastdays | 31 |
| வரவிருக்கும் முக்கிய நிகழ்வுகள் | 34 |
| Bishop's Engagements | 35 |

Editorial Board
Patron
His Excellency
Mar George Rajendran SDB
Chief Editor
Fr. Joseph Santhosh
Executive Editor
Mr. Soundara Raj
Associate Editors
Fr. Thomas Sathianesan
Mr. Edwinson
Mr. Berlin Athencod
Published by:
Fr. Joseph Santhosh
Bishop's House
Post Box No . 12
Thuckalay - 629 175
K.K.Dist,Tamil Nadu,India.
Designed by:
Jesin
Printed at
Pulari Offset Press
Thuckalay
Ph:04651-252570

Bishop George Rajendran SDB
Diocese of Thuckalay

Mobile: +919443281100
Email: bpgeorgerajendran@gmail.com

BISHOP'S HOUSE
P.B. No. 12, Thuckalay P.O.
Kanyakumari District
Tamilnadu – 629175, India
Phone: +91-4651-250633
Diocese Email: thuckalaydiocese@yahoo.com

**REF. NO. PRIESTS/GR/116/2020**

31 December 2020

Dear and Rev. Fathers,

Greetings and prayerful wishes Bishop's House, Thuckalay!

As the year 2020 is ebbing away, we are entering the new year 2021. Whenever we end a year and begin another year, we think of the wonderful gift of God, namely, time. Although God is above time, we are blessed with time with which we can grow, develop and become more humane and spiritual. While wishing you a prosperous and grace-filled New Year, let me remind you that we need to make good use of the precious gift of time that God has generously given to us.

The new year is a gift, totally free and full of promises. The whole lot of opportunities and possibilities lie ahead of us and it is up to us as individuals and communities, to decide what sort of history we will fill it up with, day by day and moment by moment. Certainly our own involvement or 'yes' will be the determining factor towards the actualization of God's plan as it was in the life of our Blessed Mother Mary. No one likes stagnation but rather would like to see our institutions and our apostolate move forward. Every year as we grow chronologically, it is important that we set targets also to grow into better human beings emotionally, mentally, spiritually, intellectually and in being evangelizers of the young effectively. I wish and pray that the future sees us moving ahead and making steady progress in personal life, be it health, professional growth orpriestly life.

The message of God's constant and caring presence that we meditate during Christmas season is reflected in the inspiring

acts of frontline and other essential workers the past year. Their sacrifice and heroism have been a source of courage and perseverance during months of hardships, uncertainties and other challenges. The arrival of the COVID-19 vaccines is a blessing of renewed hope and a much-awaited answer to people's prayers and aspirations of getting back to our normal lives.

The outlook for the new year is bright, but depends on us to make it a reality. It allows us to turn the page of time and history to brace ourselves for what better things it offers us. One good thing the pandemic taught us is that we are all in this together, and the best answer to its disastrous effect is our unity and solidarity. Pope Francis said recently in the backdrop of a divided and polarized world, that "a crisis can be overcome by the antibodies of solidarity." This was the central message in his recent encyclical, Fratelli Tutti, – the call to global fraternity and social friendship, that all people will live together as a family, as brothers and sisters to one another, treating each other with dignity and equality.

Furthermore, in his message for 2021 World Day of Peace, Our Holy Father promotes a culture of care as a path to peace, urging us against the prevailing culture of indifference to the sufferings of others, of waste, of hatred and confrontation, to practice the Social Teachings of the Catholic Church. Let this culture of care start in the family, the fundamental nucleus of our society, where we first learn how to live together and relate to each other with mutual love and respect.

The new year brings a sense of renewal, a chance to reflect on who we are as people of faith and how we might become better followers of Christ. The lessons of the past year highlighted our global interconnectedness and solidarity, our belief in the sanctity of life and respect for the dignity of every human person. We learned that showing our love for one another, friend or stranger, can be as simple as wearing a mask. The inconvenience of such practice is far outweighed by the opportunity to show our regard for the wellbeing of one another.

The Feast of Mary, the Mother of God ushers the start of the

new year. This is a perfect time to invoke the loving intercession and maternal protection of the Blessed Virgin Mary to help us join together in mutual resolution to live the Gospel values of faith, hope and charity, as well as to grow in our commitment as responsible stewards of God's gift of creation and to pursue the common good.

The Solemnity of Epiphany that we mark on 3 January is a celebration of God's manifestation of Himself through His son Jesus Christ. Epiphany refers to God's Self-revelation as well as to the revelation of Jesus as His Son. It is an older celebration than the feast of Christmas, having originated in the East in the late second century. In Italy and Spain, the gifts traditionally associated with the Christmas season are exchanged today, on the feast of the Epiphany. Among Italians, it is believed that the gifts are brought by the old woman, Befana(from Epiphany), whereas Spanish custom attributes the gifts to the kings or magi. In the Western Church, the feast commemorates the coming of the Magi as the first manifestation of Christ to the Gentiles. In the Eastern Church, the feast also commemorates the baptism of Christ. The angels revealed Jesus to the shepherds, and the star revealed him to the Magi, who had already received hints of him from Jewish scriptures. Later, God the Father revealed Jesus' identity to Israel at his baptism in the Jordan. In the synagogue at Nazareth, Jesus revealed himself as the promised Messiah. These multiple revelations are all suggested by the Feast of the Epiphany. The Epiphany can be looked on as a symbol for our pilgrimage through life to Christ. The feast invites us to see ourselves as images of the Magi, a people on a journey to Christ.

The year 2021 is important for each one of us as it is the silver jubilee year of the establishment of our Eparchy. The preparations for the great jubilee already began in 2019 and we shall conclude the celebrations in the month of November 2021. As you are aware, our Eparchy was established by the papal Bull Apud Indorum on 11 November 1996. It was erected separating the area of the Archdiocese of Changanacherry that extended over to the state of Tamil Nadu. The then Vicar General of the Archdiocese of

Changanacherry Fr George Alencherry was appointed the first bishop of the new Eparchy. Since then our eparchy has grown not only in numbers but also in area. Today almost one third area of the State of Tamil Nadu comes under the jurisdiction of the Eparchy. The number of priests and religious have grown. Hence, it is a moment of thanksgiving to the Almighty for the great things that He has done for us. We need to intensify our preparations so that when we conclude the celebrations we have made great strides that would help our faithful to come closer to the person of Christ.

May the New Year that we are about to enter in be a blessed and peaceful one for us all. We have many things to look forwards to during the course of the new year. Each of us will have our own personal wish list and expectations. I pray that the new year may inspire each one of us to dispel the frustrations, sufferings, grief and loneliness of those who have lost loved ones due to the coronavirus pandemic. Christmas season is a great reminder of God's infinite love for us in the incarnation of Jesus. Born as our Saviour, he came to bring light, joy and peace to the world! May God bless us with the peace, joy and hope 2021 brings. Happy New Year!

**CONCLUSION**

As already mentioned, on the first day of the year, we celebrate the feast of Mary, Mother of God. It is indeed a wonderful opportunity for all of us to entrust ourselves to the maternal care and protection of Mary as we begin the New Year, a precious gift from God. Let us make good use of this year in order to become more Christ-like and to bring his message to as many people as possible so that the invocation that recite in the prayer Our Father may be realised during this jubilee year: Thy kingdom come.

With my prayers and blessings,

Yours in Christ Jesus,

+ George Rajendran SDB
Bishop of Thuckalay

## ஆயர் திருமுகம்

Bishop George Rajendran sdb
Diocese of Thuckalay

# PASTORAL LETTER NO/GR/44/2020

ஈசோ மெசியாவில் அன்பிற்குரிய அருட்தந்தையரே! அருட்சகோதரிகளே!

அன்பு இறைமக்களே! நம் தந்தையாம் கடவுளிடமிருந்தும், ஆண்டவராம் ஈசோ மெசியாவிடமிருந்தும் அமைதியும் அருளும் உரித்தாகுக!

கோவிட்-19 பெருந்தொற்று உருவாகி, பரவி நம் வாழ்வைப் பெரும் சோதனைக்கு உட்படுத்தியது என்பது உண்மை. ஆனால் இக்காலகட்டத்தை நாம் துணிவுடனும் நம்பிக்கையுடனும் மிகுந்த கனிவுடனும் எதிர்கொண்டோம் என்பது நமக்குப் பெருமை சேர்க்கிறது. நல்லுள்ளம் படைத்தோர் பலர் தனிநபராகவும் குடும்பமாகவும் பங்குக்கோயிலோடு இணைந்தும் மக்களின் நலனையும் உயிரையும் பேணுவதில் பெரும் பங்காற்றினர். அரசும் இதில் முழுவீச்சில் செயல்பட்டது. வாழ்வைக் குறித்த நிச்சயமற்ற ஐயங்கள் நிறைந்த தருணத்தில் திருச்சபை சிறப்புடன் செயல்பட்டு மக்களுக்கு உதவிக்கரம் நீட்டியதை எண்ணி மகிழ்கிறேன். நம்முடைய பங்குக்கோயில்கள் திருவருட்சாதனங்கள் நிறைவேற்றுவதற்கு உகந்த பாதுகாப்பான இடமாக மாறிட மிகுந்த கவனத்துடன் செயலாற்றிய அருட்தந்தையர்கள், கன்னியர்கள் மக்கள் தன்னார்வத் தொண்டர்களை நன்றியோடு நினைத்து நான் கடவுளுக்கு நன்றி செலுத்துகிறேன். பிள்ளைகளை விசுவாசத்திலும் உளத்திடனிலும் திடமாக வைத்திட பலச் செயல்திட்டங்களை முன்னெத்த பள்ளிக்கூடங்கள், பக்த இயக்கங்கள் ஆகியவற்றை வெகுவாகப் பாராட்டுகிறேன். இச்சூழலில் தான் நாம் 2020-ஆம் ஆண்டுக்கான கிறிஸ்துமஸ் விழாவைச் சிறப்பிக்கிறோம்.

ஒவ்வொரு மனிதரைப் பற்றியும் அக்கரை கொண்டுள்ள கடவுள், வரலாற்றில் நுழைந்து, மனிதர்களோடு சேர்ந்து பயணிக்கின்றார்; அவர்களோடு உடன் வாழ்கின்றார்; கரம் தாங்கி அவர்களை சுமக்கின்றார்; உயர்நிலை நோக்கி வழிநடத்துகின்றார். இம்மாபெரும் உண்மையை ஒவ்வொரு கிறிஸ்துமஸ் விழாவும் நமக்கு நினைவூட்டுகிறது. நம்மோடு அன்பால் இணைந்து வாழ ஆவலுற்ற கடவுள் அதை அழுத்தமாய் வெளிப்படுத்த, தன் இறைமையைத் துறந்து வீழ்ச்சியுற்ற நம் மனித இயல்பை ஏற்றார். நம்முடைய கிறிஸ்துமஸ் வாழ்த்துகள் அனைத்தும் ஒரே ஒரு பெயரைத்தான் கொண்டிருக்க வேண்டும்; இயேசு கிறிஸ்துவே கிறிஸ்துமஸ் விழாவிற்கான காரணம், அவரின்றி வேறில்லை.

ஏழ்மையின் உருவில் மாட்டுத் தொழுவத்தில் பிறந்த இயேசுவின் விழாவே, உலகின் மிகப்பெரிய கொண்டாட்டமாகத் திகழ்கிறது. குழந்தைக்காலத்தின் மாசற்றத் தருணங்களை அசைப்போட்டுப் பார்க்க கிறிஸ்துமஸ் நமக்கு வாய்ப்பு ஏற்படுத்தித் தந்திருக்கிறது எனலாம். துணைதேடி நிற்கும் கைக்குழந்தையாய், தீவனத்தொட்டியில் கிடக்கும் பிஞ்சு மழலையை கண் இமைக்காமல் பார்க்கும்போது மெய்மறந்து போவோம். விசித்திரமான

நிகழ்வுகள் நடந்த இரவினில் இயேசு பிறந்தார் என நற்செய்தி நூல் கூறுகிறது. இடையர்களை ஒளிவெள்ளம் சூழ்ந்தது, தூதர்கள் கீதங்கள் இசைத்தனர். நம்மை விந்தையில் ஆழ்த்துவது எதுவெனில், இயேசு பிறந்த எளிமையின் கோலம். கிறிஸ்துமஸ் என்பது சாதாரணமான கதையல்ல, மாறாக விண்ணகம் மண்ணகத்தைச் சந்தித்த அதிஉன்னத நிகழ்வு. அன்பு மண்ணகத்தில் பிறந்தது; படைப்பையும் படைத்தவரையும் பிரித்த சுவர்கள் தகர்க்கப்பட்டன; மனித வாழ்வு நிலையான மாண்பைப் பெற்றது. நமது எல்லைகளைத் தாண்டி விண்ணகத்தின் மகிழ்வினை துய்க்கும் பாதைகள் திறந்தன.

கண்களுக்கு விருந்து படைக்கும் குதூகலம் எதுவும் முதல் கிறிஸ்துமஸ் நாளில் நடக்கவில்லை. மரியாவுக்கும் யோசப்புக்கும் கிறிஸ்து பிறப்பு கசப்பான அனுபவமாக இருந்தது. தட்டிய கதவுகள் எல்லாம் இறுக்கமாக அடைக்கப்பட்டன. படுத்திட அறையோ தங்கிட விடுதியோ கிடைக்காமல் அலைந்த அவர்கள் ஏழ்மையின் கோரமான முகத்திற்கு சாட்சிகளாயினர். இறுதியில், அடைத்துப் பாதுகாக்கப்பட்ட சுவர்களுக்கு வெளியே தங்க வேண்டியதாயிற்று. கால்நடைகள் தங்களின் தீவனத்தொட்டியை இயேசுவின் படுக்கையாக தானமாக்கின. எருசலேமிற்கு வெளியே கால்வரியில் இறக்க வேண்டியிருந்த இயேசு பெத்லகேமிற்கு வெளியே பிறக்க வேண்டியதாயிற்று. கடவுளின் அன்பு அனைவருக்குமானது என்பது முதலிலே வெளிப்படுத்தப்பட்டது எனினும், ஏழைகளுக்கும் வலுவிழந்தோருக்கும் உரிமைகள் மறுக்கப்பட்டோருக்கும் இவ்வன்பில் முன்னுரிமை உண்டு என்பது நிரூபணமாயிற்று. கடைநிலை மக்களில் குடிகொள்ளும் நன்மைகளையும் அருளையும் காண்பதற்காக நம் விழிகளைத் திறக்க வேண்டும் என்பதை வைக்கோல் சுட்டிக்காட்டுகிறது. புற்குடிலின் முன்னால் முழங்கால் மடக்கும் போது, இச்சுருங்கிய வாழ்வின் வேளையில், அனைத்தையும் கடவுளின் கண்களால் பார்ப்பதற்கும் அவர் விருப்பம் போல் செயல்படுவதற்கும் தேவையான அருள் வரத்திற்காகச் செபிப்போம்.

நம்மோடு வாழும் நம்மோடு உழைக்கும் மானிடர் ஒவ்வொருவரிலும் பற்பல விந்தைகளால் தன்னையே வெளிப்படுத்திக் கொண்டிருக்கும் இயேசுவை முழுமையாக முழு மாண்புடன் ஏற்றுக்கொள்ளும் போது கிறிஸ்மஸ் நமக்கு அர்த்தமிக்கதாக மாறுகிறது. நம் நண்பர்கள் நம்மை நினைத்திட கிறிஸ்துமஸ் வாய்ப்பு ஏற்படுத்துகிறது. இது குடும்ப விழாவாக இருப்பதோடு நண்பர்களோடு பரிசுகளை பகிர்ந்து கொள்ளும் தருணங்களையும் நமக்கு அளிக்கிறது. நம்மோடு கிறிஸ்துமஸ் விழாவை கொண்டாட இயலாமல், தூரமாக இருப்பவர்களையும் நம்மை விட்டுப் பிரிந்து சென்றவர்களையும் நாம் சிந்தையில் கொள்வோம். கடவுளின் வருகை தவறான புரிதல்களைகளையும் பிணக்குகளைப் போக்கும்; நிகழ்ந்திட்ட சோகங்களை புறந்தள்ள உதவும். வாழ்வின் கசப்பான நினைவுகளை துடைத்து நீக்குவது சுலபமல்ல. ஆனால், மன்னித்து மறக்கும் போது கிறிஸ்துமஸ் இன்பமிக்கதாக மாறும்.

கிறிஸ்துமஸ் கனிவின் காலம்; கொடுப்பதற்கு ஏற்ற காலம்; அன்பைப் பகிர்ந்திடும் உன்னத காலம். கொடுப்பதில் அடங்கியிருக்கும் மகிழ்ச்சி பெறுவதில் இல்லை என்பதை உணர்த்தும் நினைவலைகளை இவ்வாண்டிறுதி

நமக்கு ஏற்படுத்தித் தந்திருக்கிறது. கையேந்தி இரக்கத்திற்காய் காத்திருக்கும் கடைநிலை சகோதரர்களுக்காக இதயம் திறக்கும்போது நம் வாழ்வு துடிப்பு மிக்கதாய் மாறுகிறது. வாழ்வில் ஏற்பட்ட பெரும் இழப்பால், ஏற்க முடியா கடினமான நிகழ்வால் மனமுடைந்து வாழும் சகோதர்ரகளுக்காக சில மணித்துளிகள் ஒதுக்குவோம். இந்த கிறிஸ்துமஸ் புனிதமிக்கதாக அமையட்டும். அப்போது அது மகிழ்ச்சியும் பேரானந்தமும் கொணரும்.

2021 ஆம் ஆண்டு மறைமாவட்ட மக்களான நமக்கு மிகவும் முக்கியமான ஆண்டாக இருக்கிறது. இது நம் மறைமாவட்டத்தின் வெள்ளிவிழா ஆண்டு. ஆன்மீக நிகழ்வுகளும் பிற உறவை வளர்க்கும் நிகழ்வுகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. பக்த இயக்கங்களும் இதர அமைப்புகளும் ஏற்பாடு செய்யும் நிகழ்வுகளில் முழுமையாக பங்கேற்று ஆன்மீகப் புத்துணர்வுப் பெற நான் உங்களை கேட்டுக்கொள்கிறேன். வெள்ளிவிழா இறுதி நிகழ்வுகள் 2021 நவம்பர் மாதத்தில் நடைபெறும். நீங்கள் பங்குகோயிலோடும் மறைமாவட்டத்தோடும் கொண்டிருக்கும் அன்பை எண்ணி நெகிழ்கிறேன். உங்களுக்காக இறைவனை வேண்டுகிறேன்.

அனைவருக்கும் எனது கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு நல்வாழ்த்துக்களை மிக்க மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். இறைவன் உங்களையும் உங்கள் குடும்பங்களையும் உங்கள் பணிகளையும் நிறைவாக ஆசீர்வதிப்பாராக.

என்றும் ஈசோ மெசியாவில்

ஆயர் இல்லம்

16.12.2020

மார் ஜார்ஜ் இராஜேந்திரன் ச.ச

தக்கலை மறைமாவட்ட ஆயர்

குறிப்பு: இவ் ஆயர் திருமுகத்தை டிசம்பர் 20, 2020 ஞாயிறு அனைத்து பங்குகளிலும் திருப்பலி இடையே வாசிக்கவும்.

## கிறிஸ்துமஸ் விழா

துறவியர் பேரவையின் உறுப்பினர்களுக்கான கிறிஸ்துமஸ் கொண்டாட்டம் கல்லுவிளை சி.எம்.சி ஆலயத்தில் வைத்து 17.12.2020 அன்று நடத்தப்பட்டது. ஆயர் அவர்கள் பங்கேற்ற நிகழ்வானது காலை 10 மணிக்கு ஆரம்பமாகி மதியம் முடிவடைந்தது. துறவியர் பேரவையின் தலைவர் பேருட்தந்தை டினு கோட்டக்கப்பறம்பில் அவர்களுக்கும் துணைத்தலைவர் அருட்சகோதரி ஆன்சிட் SABS அவர்களுக்கும் நிகழ்வை ஒருங்கிணைத்த அனைவருக்கும் மறைமாவட்டத்தின் சார்பில் நன்றிகள்.

Bishop George Rajendran SDB
Diocese of Thuckalay

Mobile: +919443281100
Email: bpgeorgerajendran@gmail.com

BISHOP'S HOUSE
P.B. No. 12, Thuckalay P.O.
Kanyakumari District
Tamilnadu – 629175, India
Phone: +91-4651-250633
Diocese Email: thuckalaydiocese@yahoo.com

20 November 2020

Prot. No.: **ETKLY/SUSP/04/2020**

## DECREE OF SUSPENSION

Fr. Kuriakose (Linslal Augusthy) Mangalath from the parish of St. George Cathedral Church, Vazhathoppu, Idukki Diocese, born on 09 February 1985 and ordained on 28 April 2014 for the Eparchy of Thuckalay is hereby suspended as per CCEO canons 1446, 1466, and 1453 §1 from the exercise of Sacred Ministry including the administration of the Sacraments and Sacramentals.

It is further decreed that he shall not be admitted anywhere for discharging of any priestly ministry either inside or outside of the Eparchy of Thuckalay until further orders to the contrary.

Hereby he has no right to receive any favour as a priest from the Eparchy of Thuckalay and he is self responsible for every act that he does during this period.

Given from the Bishop's Office on 20 November 2020.

**+ Mar George Rajendran SDB**
Bishop of Thuckalay

Rev. Fr. Thomas Sathianesan
Chancellor



CATECHISM
# மறைக்கல்வி

> வாழ்வின் வழியை நான் அறியச் செய்வீர். உமது முன்னிலையில் எனக்கு நிறைவான மகிழ்ச்சி உண்டு. (திரு.தூத 2:28)

மறைமாவட்ட வெள்ளிவிழா சிறப்பு நிகழ்வாக, சீரோ மலபார் திருப்பலியின் விளக்கமானது வகுப்புகளாக மறைமாவட்ட மறைக்கல்வி ஆசிரியர்கள் அனைவரும் பங்கேற்கும் விதத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சான்றிதழ் அளிக்கப்படும் இவ்வகுப்புகள் 2021 ஜனவரி 9, 16, 23, 30 ஆகிய தேதிகளில் இணையவழி காணொளி வகுப்பாக நடைபெறும். அருட்தந்தை டென்சி முண்டுநடைக்கல் மற்றும் அருட்சகோதரர் மகேஷ் ஆகியோர் வகுப்புகளை வழிநடத்துவர்.

# சிறுமலர்
MISSION LEAGUE



## மிஷன்லீக் இயக்கம்

கிறிஸ்து பிறப்பு விழாவுக்கு ஆயத்தமாக சிறுமலர் மிஷன் லீக் இயக்கத்தின் சார்பில் கிறிஸ்துமஸ் பாடல் போட்டி நடைபெற்றது. இப்போட்டியில் பங்கு பெற்ற அனைத்து மிஷன் லீக் உறுப்பினர்களாகிய சிறு திருத்தூதர்களுக்கு நன்றிகளும் பாராட்டுகளும் தெரிவித்துக் கொள்கிறேன். எல்லா பங்குகளிலும் உங்கள் செயல்பாடுகள் மிகவும் சிறப்பாக உள்ளதை நினைத்து மிக்க மகிழ்ச்சியடைகிறேன். நமது சீரோ மலபார் சபையின் மறைத்தூது வாரம் எல்லா வருடமும் ஜனவரி 6 ஆம் தேதி முதல் 12 வரை கொண்டாடப்படுவது வழக்கம். இவ்வருடமும் நாம் மறைத்தூது வாரம் கொண்டாட உள்ளோம். அதற்காக உங்கள் ஒவ்வொருவரையும் ஆன்மீக வளர்ச்சிக்கு ஊக்கமூட்டும் நோக்கத்தில் ஒரு மெகா வினாடி வினாப் போட்டி நடத்த தீர்மானித்துள்ளோம். அனைத்து மிஷன் லீக் உறுப்பினர்களும் இதில் கலந்து கொண்டு பரிசுகளைப் பெற வாழ்த்துகள்.

மேலும் ஜனவரி 10 ஞாயிறன்று திருப்பலி மற்றும் காணிக்கைப் பவனியை மிஷன் லீக் உறுப்பினர்கள் சிறப்பிக்க கேட்டுக் கொள்கிறேன். அவ்வாறு கிடைக்கும் தொகையை வளர்ந்து வரும் மறைத்தூதுத் தளங்களுக்குக் கொடுத்து அவர்களின் வளர்ச்சியில் நாமும் பங்கு கொள்வோம்.

**அருட்தந்தை அலெக்ஸ் புத்தேட்**
**இயக்குநர்**

HOLY CHILDHOOD
குழந்தை ஈசோ

## குழந்தை ஈசோ இயக்கம்

### பொறுப்பாளர்களின் கூட்டம்

23.12.2020 அன்று மதியம் 2.30 மணியளவில் பொறுப்பாளர்களின் கூட்டம் கல்லுவிளை மறைக்கல்வி நிலைய அலுவலகத்தில் வைத்து நடைபெற்றது. மறைமாவட்டத்தின் அனைத்து பங்குகளிலிருந்தும் பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

### கிறிஸ்துமஸ் விழா

கிறிஸ்து பிறப்பு விழாவினைக் கொண்டாடும் விதத்தில், அருட்சகோதரி சூனா அவர்கள் தலைமையில் கிறிஸ்துமஸ் பாடல் பாடினர். இயக்குநர் தந்தை அவர்கள் கிறிஸ்துமஸ் வாழ்த்துச் செய்தி வழங்கினார்கள். கேக் வெட்டி அனைவருக்கும் கொடுத்தனர். அத்தோடு 2021 Diary வழங்கப்பட்டது.

### பரிசுகள்

மறைமாவட்டத்திலுள்ள 10 வயதிற்குட்பட்ட அனைத்து குழந்தை ஈசோ இயக்கக் குழந்தைகளுக்கும் கிறிஸ்துமஸ் பரிசுகள் வழங்கப்பட்டன.

### வரவிருக்கும் நிகழ்வுகள்

ஒவ்வொரு பங்கிலும் குழந்தை ஈசோ இயக்க குழந்தைகளின் பெற்றோர் ஆசிரியர் கூட்டம் நடைபெறும்.

குழந்தைகளுக்கு கலைவிழா போட்டிகள் நடைபெறும். அதற்கான பெயர்களை பதிவு செய்ய அறிவுறுத்தப்பட்டது.

### போட்டிகள்

Infant - Coloring

Child - Pencil Drawing

28.12.2020 அன்று குழந்தைகள் தினத்தை அனைத்து பங்குகளிலும் சிறப்பாக கொண்டாடக் கேட்டுக்கொள்ளப்பட்டது.

**அருட்தந்தை ஜோமோன்**
**மங்கலாமடத்தில்**
**இயக்குநர்**

## அருட்தந்தையரின் கிறிஸ்துமஸ் கொண்டாட்டம்

அருட்தந்தையருக்கான சிறப்பு கிறிஸ்துமஸ் கொண்டாட்டம் டிசம்பர் 13, 2020 அன்று நடைபெற்றது.

YOUTH APOSTOLATE
இளையோர் பணி

# தக்கலை கத்தோலிக்க இளைஞர் இயக்கம்

## கிறிஸ்துமஸ் விழா

தக்கலை கத்தோலிக்க இளையோர் இயக்கத்தின் கிறிஸ்துமஸ் விழாவானது புனித சூசையப்பர் மறைவட்ட ஆலயம் சூசைபுரத்தில் வைத்து சூசைபுரம் மறைவட்ட இளையோர்கள் தலைமையில் மிகச்சிறப்பான முறையில் நடைபெற்றது. இவ்விழாவில் பேரருட்தந்தை தோமஸ் பவத்துப்பறம்பில் அவர்களும் பேரருட்தந்தை தோமஸ் சத்தியநேசன் அவர்களும் சிறப்பு விருந்தினர்களாகப் பங்கேற்றனர். பேரருட்தந்தை தோமஸ் சத்தியநேசன் அவர்கள் தொடக்கவுரையாற்றி விழாவினைத் தொடங்கி வைத்தார். அதன்பின் *புவோண் நத்தாலே* என்ற தலைப்பில் குறும்படப் போட்டியும் கிறிஸ்துமஸ் பாடல் போட்டியும் நடைபெற்றன. இதில் அனைத்து பங்குகளிலிருந்தும் இளையோர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். அதன்பின் தேர்தல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட மறைமாவட்ட பொறுப்பாளர்களுக்கு அருட்தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் தலைமையில் பதவியேற்பு நடைபெற்றது. பின்னர் போட்டிகளில் வெற்றிபெற்ற அனைத்து இளையோர்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன. குறும்படப் போட்டியில் படந்தாலுமூடு திரு இருதய ஆலயத்தைச் சேர்ந்த இளையோர்கள் முதல் இடத்தையும், தெற்றியோடு புனித பவுல் ஆலய இளையோர்கள் இரண்டாம் இடத்தையும், வாறுதட்டு புனித சேவியர் ஆலய இளையோர்கள் மூன்றாவது இடத்தையும் கைப்பற்றினர். கிறிஸ்துமஸ் பாடல் போட்டியில் சிறுமலர் மறைவட்ட ஆலயம் பிலாங்காலையைச் சேர்ந்த இளையோர்கள் முதலிடத்தையும் சிறுமலர் மறைவட்ட ஆலயம் மஞ்சாலுமூட்டைச் சேர்ந்த இளையோர்கள் இரண்டாவது இடத்தையும் கிறிஸ்து அரசர் ஆலயம் பரைக்கோடு இளையோர் மூன்றாவது இடத்தையும் கைப்பற்றினர். தக்கலை மறைமாவட்ட முதன்மை குரு பேரருட்தந்தை தோமஸ் பவத்துப்பறம்பில் அவர்கள் தலைமை உரை ஆற்றி பின்னர் பரிசுகளையும் வழங்கினார். அதன் பின்னர் Camp fire நடத்தப்பட்டது. இளையோர்கள்

மிக்கமகிழ்ச்சியுடன் கலந்து கொண்டனர். கிறிஸ்துமஸ் விழாவை மிகச்சிறப்பான முறையில் நடத்த உதவிய சூசைபுரம் மறைவட்ட இயக்குநர் சுபின் ஸ்கரியா அவர்களுக்கும் சூசைபுரம் மறைவட்ட இளையோருக்கும் நன்றிகள். மேலும் பல விதத்தில் உதவிய மறைவட்ட முதன்மை குரு பேரருட்தந்தை ஆன்டணி ஜோஸ் அவர்களுக்கும் நன்றிகள்.

## வேலைவாய்ப்பு முகாம்

தக்கலை கத்தோலிக்க இளையோர் இயக்கம் சார்பாக, பெண்களுக்கான வேலைவாய்ப்பு முகாம் 06.12.2020 அன்று,



திருச்சி தொன் போஸ்கோ வழிகாட்டியின் வழிகாட்டுதலில் நடைபெற்றது. பிரபல அலைபேசி நிறுவனங்களுக்காக நடத்தப்பட்ட இம்முகாமில் 15 இளையோர் பங்கேற்றனர்.

தக்கலை மறைமாவட்ட இளையோர் இயக்கம் சார்பாக ICICI வங்கி முழுநேர பணிக்கான இளநிலை மற்றும் முதுநிலை பட்டதாரிகளுக்கான நேர்முகத் தேர்வானது 29.12.2020 அன்று கருங்கல் புனித அல்போன்சா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில்



வைத்து நடைபெற்றது. இதில் 160 க்கும் மேற்பட்ட இளையோர்கள் பங்கேற்றார்கள். 67 பேர் தேர்வு செய்யப்பட்டார்கள். திருச்சி தொன் போஸ்கோ வழிகாட்டி நிகழ்வை ஏற்பாடு செய்ய உதவியது.

## நடுவண் செயற்குழு

மறைமாவட்ட இயக்குநர் அருட்தந்தை ஜோசப் சந்தோஷ் மற்றும் மறைமாவட்ட ஊக்குவிப்பாளர் அருட்சகோதரி ரேஷ்மி அவர்களுடன் நடுவண் செயற்குழு உறுப்பினர்கள் அனைவரும் 23.12.2020 அன்று ஆயர் இல்லத்திற்கு சென்று நமது ஆயர் மேதகு மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்களை சந்தித்து இனிப்பு வழங்கி கிறிஸ்துமஸ் வாழ்த்துகளை தெரிவித்தனர். மறைமாவட்ட முதன்மை குரு அனைவருக்கும் செபமாலை வழங்கினார். ஆயர் அவர்கள்,





அனைவருக்கும் நாட்குறிபேடு அளித்தார்.

நடுவண் செயற்குழு உறுப்பினர்கள் கூட்டமானது 31.12.2020 அன்று மறைமாவட்ட இயக்குநர்தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்களின் தலைமையில் தெற்றியோடு புனித பவுல் ஆலயத்தில் வைத்து நடைபெற்றது. இக்கூட்டத்தில் கலந்தாலோசிக்கப்பட்டு 2021 ஜனவரி மாதம் 15 மற்றும் 16 ஆம் தேதிகளில் கத்தோலிக்க




இளையோர் இயக்கம் சார்பில் தலைமைத்துவப் பயிற்சி முகாம் தக்கலை சங்கமத்தில் வைத்து நடத்த தீர்மானிக்கப்பட்டது. பின்னர் நடுவண் செயற்குழு உறுப்பினர்கள் கிறிஸ்துமஸ் பரிசுகளை கைமாறி வாழ்த்துகளை தெரிவித்தனர். அதன்பின்னர் கூட்டமானது நிறைவடைந்தது.

## களியல் மறைவட்ட இளையோர் இயக்கத் தொடக்க விழா

தக்கலை கத்தோலிக்க இளையோர் இயக்கத்தின் களியல் மறைவட்ட தொடக்க விழாவானது களியல் புனித மரியன்னை ஆலயத்தில் 06.12.2020 அன்று நடைபெற்றது. அன்று பிற்பகல் 2 மணியளவில் அருட்தந்தை மரிய மார்ட்டின் அவர்களின் தியான உரையுடன் தொடங்கிய நிகழ்வில், ஒப்புரவு அருளடையாளம் பெறுவதற்கான வாய்ப்பும் ஏற்படுத்தப்பட்டிருந்தது. அதன் பின்னர் தொடக்கநிகழ்வானது தக்கலை மறைமாவட்ட ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்களால் நடத்தப்பட்டது. இதில் மறைமாவட்ட இயக்குநர் அருட்தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்களும், களியல் மறைவட்ட முதன்மை குரு பேரருட்தந்தை டினு CMI அவர்களும் பங்கேற்று வாழ்த்துரை வழங்கினர். ஆயர் தமது தலைமை உரையில் கிறிஸ்தவ வாழ்வு, திருச்சபையில் இளையோரின் பங்கேற்பு பற்றி விரிவாக பேசினார். கூட்டம் இயக்க கீதத்துடன் நிறைவுற்றது. அனைவருக்கும் உணவு வழங்கப்பட்டது. நிகழ்வுகளை மறைவட்ட இயக்குநர் தந்தை அஜீஷ் அட்டியில் அவர்கள் தலைமையில் மறைவட்ட இளையோர் சிறப்பாக நடத்தினர்.

**ஆனந்தி**
**செயலர்**

# இல்வாழ்வு இயக்கம்



**அஞ்சாதே, நான் உன்னுடன் இருக்கிறேன்; கலங்காதே, நான் உன் கடவுள், நான் உனக்கு வலிமை அளிப்பேன்; உதவி செய்வேன்; என் நீதியின் வலக்கரத்தால் உன்னைத் தாங்குவேன் (எசா 41:10).**

## இல்வாழ்வு இயக்கம்

இல்வாழ்வு இயக்கத்தின் சார்பாக இனிய புத்தாண்டு நல்வாழ்த்துகள். இல்வாழ்வு இயக்கத்தின் கிறிஸ்துமஸ் விழா டிசம்பர் 21 ஆம் தேதி திங்கள்கிழமை கொண்டாடப்பட்டது. இயக்குநர் தந்தை அவர்கள் கிறிஸ்துமஸ் விழாவை பற்றி உரையாற்றினார். பின்னர் அலுவலக பணியாளர்களுக்கு இனிப்பு மற்றும் பரிசுகளை வழங்கினார்.

## மாதர் ஜோதிஸ் இயக்கம்

மாதர் ஜோதிஸ் ஊக்குவிப்பாளர்கள் மற்றும் தலைவர்களுக்கான கூட்டம் கல்லுவிளை இல்வாழ்வு இயக்கத்தில் வைத்து டிசம்பர் 19 மதியம் 2.30 மணியளவில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு பேரருட்தந்தை தாமஸ் பவத்துப்பறம்பில் தலைமை ஏற்று நடத்தினார். கிறிஸ்துமஸ் கேக் வெட்டி கூட்டத்தில் கலந்து கொண்டவர்களுக்கு கொடுக்கப்பட்டது. இயக்குநர் தந்தை அவர்கள் மறைவட்ட அளவிலான புதிய மாதர் ஜோதிஸ் செயற்குழு உறுப்பினர்களை தெரிந்து எடுத்தார். இந்த கூட்டத்தில் சுமார் 70 பேர் கலந்து கொண்டனர். மாதர் ஜோதிஸ் இயக்கத்துக்கான ஆண்டுவிழா வருகின்ற 2021 ஜனவரி 31 ஆம் தேதி நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## கேரல் குழு போட்டி

கேரல் குழு படல் போட்டியானது மாதர் ஜோதிஸ் தாய்மார்களுக்கு நடத்தப்பட்டது. இதில் 33 பங்குகளில் இருந்து 38 குழுக்கள் பாடலைப் பாடி வீடியோ எடுத்து WhatsApp மூலமாக அனுப்பி வைத்தனர். இந்த போட்டியின்



முடிவுகள் ஜனவரி முதல் வாரத்தில் வெளியாகும். திருக்குடும்ப விழாவை ஒட்டி தாய்மார்களுக்கு திருக்குடும்பத்தின் முன்மாதிரியான குடும்பம் என்னும் Task கொடுக்கப்பட்டது. தாய்மார்கள் தங்களது குடும்பத்துடன் இணைந்து புதுமையுடன் போட்டோ எடுத்து அனுப்பி வைத்தார்கள். இந்த task இல் ஏராளமான தாய்மார்கள் பங்கேற்றனர். இந்த taks இல் மாறப்பாடி தோமையார் ஆலயம் சார்ந்த டெல்வின் (Delwin) என்பவர் முதல் இடம் பிடித்தார்.

### திருமண ஆயத்தப் பயிற்சி

திருமண ஆயத்தப் பயிற்சியானது டிசம்பர் 12 மற்றும் 13 தேதிகளில் படந்தாலுமூடு திரு இருதய ஆலய வளாகத்தில் நடைபெற்றது. இதில் சுமார் 35 மாணவர்கள் பங்கேற்றனர். அடுத்த திருமண ஆயத்த ஆயத்தப் பயிற்சியானது ஜனவரி 16, 17 தேதிகளில் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**அருட்தந்தை ஜிம்மி தெக்கேகடுமத்தில்**
**இயக்குநர்**

VINCENT-DE-PAUL
வின்செந்தியர்

# தக்கலை மத்திய சபை

### நித்திரவிளை வட்டார சபை

நித்திரவிளை வட்டார சபையின் கிறிஸ்துமஸ் விழா கூட்டம் 13.12.2020 அன்று வாட்டார சபையின் ஆன்மீக இயக்குநர் பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்கள் தலைமையில் நடபெற்றது. தொடக்க செபத்துடன் கூட்டம் ஆரம்பமானது. வட்டார சபையின் தலைவர் அனைவரையும் வரவேற்றார். செயலர் அறிக்கை வாசித்தார். பின் மத்திய சபையின் திட்ட அலுவலர் சகோ. ஜாண் அவர்கள் கிறிஸ்துமஸ் செய்தி வழங்கினார்கள். அவர் கூறும்போது, கிறிஸ்து பிறப்பு விழா அன்பின் விழாவாகவும் உணர்வூட்டும் விழாவாகவும் அமைய வேண்டும் என்றார். மேலும் ஏழைகளை அதிகம் நமது பார்வைக்கு கொண்டு வருவதாகவும் அமைய வேண்டும். பொருளாதார உதவியோடு ஆன்மீக உதவியும் செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

ஆன்மீக இயக்குநர் தந்தை அவர்கள் கேக் வெட்டி ஆன்மீக உரையாற்றினார். அவர்கள் பேசும்போது ஈசோவின் பிறப்பும் வின்செந்தியர் வாழ்வும் ஏழை எளிய மக்களுக்கு உதவும் நிலையும் ஒன்றுக்கொன்று தொடர்புடையதாக அமைய வேண்டும். ஈசோவின் வாழ்வு நமக்கு ஒரு முன்மாதிரியான வாழ்வாக அமைகிறது என்று வாழ்த்துரை வழங்கினார்.

பின்னர் வயலங்கரை கிளைச்சபைக்கு மருத்துவ உதவியாக ரூ. 8000 வழங்கப்பட்டது. இறுதியாக செயலர் அனைவருக்கும் நன்றி கூற இறுதி செபத்துடன் கூட்டம் இனிது நிறைவு பெற்றது. கூட்ட முடிவில் அனைவருக்கும் இனிப்பு மற்றும் தேனீர் வழங்கப்பட்டது.

20.12.2020 அன்று மாலை 2.30 மணிக்கு வயலங்கரை புனித அந்தோணியார் ஆண்கள் கிளைச்சபையும் பெண்கள் கிளைச்சபையும் இணைந்து கிறிஸ்து பிறப்பு விழா கொண்டாடினர். விழாவில் ஆன்மீக ஆலோசகர் அருட்தந்தை ரோபின்ஸ் குழிகோடில் பங்கேற்று தலைமை தாங்கினார். விழாவில் மத்திய சபை உறுப்பினர் சகோ. ஜாண் அவர்கள் பங்கேற்றார். தத்து

குடும்பங்கள் 14 க்கு ரூபாய் 1000 வீதம் வழங்கப்பட்டது. கூட்டத்தின் இறுதியில் சகோ நிகேஷ் நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவுற்றது.

23.12.2021 அன்று மாலை 6 மணிக்கு நித்திரவிளை ஜெயமாதா ஆண்கள் கிளைச்சபையும், லிட்டில் ப்ளவர் பெண்கள் கிளைச்சபையும் இணைந்து மூன்று தத்து குடும்பங்களுக்கும் ஐந்து ஏழை குடும்பங்களுக்கும் ரூ. 500 வீதம் வழங்கியதோடு, ரூ. 100 மதிப்புள்ள கேக்கும் வீடுகளுக்குச் சென்று வழங்கப்பட்டது.

27.12.2020 அன்று காலை 9 மணியளவில் நித்திரவிளை ஜெயமாதா ஆண்கள் கிளைச்சபையும், லிட்டில் ப்ளவர் பெண்கள் கிளைச்சபையும் இணைந்து சுழற்சி முறை கடனுதவி திட்டத்திலிருந்து கடனுதவியாக தலா ரூ. 10000 வீதம் 9 நபர்களுக்கு வழங்கியது. கடனுதவியானது ஆன்மீக ஆலோசகர் பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் தலைமையில், மத்திய சபை உறுப்பினர் சகோ ஜாண் அவர்கள் முன்னிலையில் வழங்கப்பட்டது. நிகழ்வின் போது, சகோ. கிறிஸ்துதாஸ் அவர்கள் விதிமுறைகளை விளக்கினார். சகோ. ஜாண் அவர்கள் திட்ட ஆவணங்களை பார்வையிட்ட பின்னர் திட்டத்தின் பயன்பாடுகள் குறித்து விரிவாகப் பேசினார். இறுதியில் கிளைச்சபைத் தலைவர் நன்றி கூற கூட்டம் நிறைவுற்றது.

## களியல் வட்டார சபை

13.12.2020 அன்று வட்டார சபை கூட்டம் பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமானது. சகோ. சௌந்தர் ராஜ், சகோ. மணிவண்ணன், வட்டார சபை துணை ஆன்மீக ஆலோசகர் அருட்தந்தை ஜோசப் ஆனித்தோட்டம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.

சகோ. சௌந்தர் ராஜ் அவர்கள் லூக்கா 1:6,12 இறைவார்த்தைகளை விளக்கி நமது சபையின் பணிகள் எப்படி நம் வாழ்விற்கு துணை நிற்கிறது என்பதையும் திருப்பாடல் 41 யும் விளக்கி கூறினார்.

இயேசுவின் கட்டளைகள், ஞானிகளின் சந்திப்பு, வழிகாட்டிய நட்சத்திரம், அமைதி ஆகியவற்றை விவிலிய பகுதிகளை மேற்கோள் காட்டி ஏழைகளில் இறைவனைக் காணும் போது உதவி செய்பவர்களாக மாறுவோம் என்று சகோ. மணிவண்ணன் அவர்கள் கூறினார். அருட்தந்தை அவர்கள் கிறிஸ்துமஸ் மகிழ்ச்சியின் விழா என்பதை விவிலிய மேற்கோள்களுடன் விளக்கிக் கூறினார்.

புதிதாக காரோடு கிளைச்சபை

தலைவி சகோதரி புஷ்பம் அவர்கள் வட்டார சபைச் செயலராக தேர்வு நியமிக்கப்பட்டார்.

களியல் கிளைச்சபை சபையின் ஆண்கள் சார்பில் ரூ. 1000 வீதம் பத்து பேருக்கும் பெண்கள் சார்பில் 8 பேருக்கும் மொத்தம் 10500 ரூபாயும், காரோடு ஆண்கள் கிளைச்சபை சார்பில் 6 பேருக்கு 3000 ரூபாயும், பெண்கள் சபையின் சார்பில் 5 பேருக்கு 300 ரூபாயும் உதவிகள் வழங்கப்பட்டன.

சேனங்கோடு கிளைச்சபைச் சார்பில் உதவிகள் ஏழைகளுக்கு வழங்கியதாக அதன் உறுப்பினர்கள் கூறினர்.

## மஞ்சாலுமூடு வட்டார சபை

கிறிஸ்து பிறப்பு விழா

மஞ்சாலுமூடு வட்டார சபை கிறிஸ்து பிறப்பு விழா புனித குழந்தை தெரசா ஆலய வளாகத்தில் வைத்து 13.12.2020 அன்று மாலை 3 மணியளவில் தொடக்க செபத்துடன் நடந்தது. வட்டார சபை தலைவர் திரு. ஜார்ஜ் வின்சென்ட் அவர்கள் அனைவரையும் வரவேற்று பேசினார். சிறப்பு விருந்தினராக பேரருட்தந்தை அகஸ்டின் தலோடில் அவர்கள் கலந்து கொண்டு கிறிஸ்து பிறப்பு நிகழ்ச்சி பற்றி கதைகள் கூறி வின்செந்தியர்கள் யாருக்கு என்ன உதவிகள் செய்தாலும் அது இயேசுவுக்கு செய்யப்படுகிறது என்ற எண்ணத்தோடு செய்ய வேண்டும் என்று கூறி கிறிஸ்து பிறப்பு செய்தியை வழங்கினார். கூட்டத்தில் 19 வின்செந்திய சகோதரர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தினர். துணைத்தலைவர் நன்றி கூற கூட்டம் இனிதே முடிவடைந்தது.

உதவிகள்

முக்கூட்டுக்கல் ஆண், பெண்



கிளைச்சபை சார்பாக 14 குடும்பங்களுக்கு 7000 ரூபாய் மதிப்பிலான பொருட்கள் வழங்கப்பட்டது.

மருத்துவ உதவியாக ரூபாய் 3500 வழங்கப்பட்டது.

முழுக்கோடு ஆண், பெண் மற்றும் இளையோர் கிளைச்சபைகள் சேர்ந்து 18 ஏழை மற்றும் தத்து குடும்பங்களுக்கு ரூபாய் 9000 மதிப்பிலான பொருட்கள் வழங்கப்பட்டன.

மாலைக்கோடு ஆண், பெண் கிளைச்சபைகள் சார்பில் 12 தத்து குடும்பங்களுக்கு ரூபாய் 6000 வழங்கப்பட்டது. மருத்துவ உதவியாக ரூபாய் 4000 வழங்கப்பட்டது.

மஞ்சாலுமூடு ஆண், பெண் கிளைச்சபைகள் சார்பாக 3 தத்து குடும்பங்களுக்கு ரூபாய் 1000 வீதம் 3000 ரூபாய் வழங்கப்பட்டது. ஏழை குடும்பங்களுக்கு ரூ. 8500 மதிப்பிலான பொருட்கள் வழங்கப்பட்டன. மருத்துவ உதவியாக ரூபாய் 2000 வழங்கப்பட்டது.

தெற்றிவிளை பெண்கள் கிளைச்சபை சார்பாக தத்து குடும்பங்களுக்கு ரூபாய் 400 வழங்கப்பட்டது.

**படந்தாலுமூடு வட்டாரம் சபை**

தெற்றியோடு கிளைச்சபை சார்பாக, கிறிஸ்துமஸ் விழாவை முன்னிட்டு 15 குடும்பங்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டன. 10 குடும்பங்களுக்கு ரூ. 1000 மதிப்பிலான அரிசி மற்றும காய்கனிகளும், கிறிஸ்மஸ் கேக்கும் வழங்கப்பட்டது. மேலும் தனிமையில் வாழும் 5 குடும்பங்களுக்கு கேக் வழங்கப்பட்டது. பங்குத்தந்தை ஜோசப் சந்தோஷ், சகோ. தாமோதரன், சகோ.சுனில் ஆகியோர் இணைந்து உதவிகளை இல்லங்களுக்குச் சென்று கொடுத்தனர். அருட்தந்தை அவர்கள் குடும்பத்திற்காக செபித்தார். மேலும் ஒருவருக்கு மருத்துவ உதவியாக ரூ. 1000 வழங்கப்பட்டது.

**ஆறுகாணி வட்டார சபை**

ஆறுகாணி வட்டார சபையின் கிறிஸ்துமஸ் கொண்டாட்டமானது 20.12.2020 அன்று ஆறுகாணி திருக்குடும்ப ஆலய அரங்கில் வைத்து நடைபெற்றது. இக்கூட்டத்தில் வட்டார சபையின் ஆன்மீக ஆலோசகர் பேரருட்தந்தை டோஜி பறம்பில்பறம்பில் மற்றும் அருட்தந்தை குரியன் கோயிப்புறம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக பங்கேற்று வாழ்த்துரை கூறினர். மேலும் மத்திய சபை இணைச்செயலர்

சேவியர் தாணுவேலில் அவர்கள் கலந்து கொண்டார். கூட்டத்தினரை அபி தோமஸ் அவர்கள் வரவேற்றார்கள். கூட்டத்தில் கலைநிகழ்ச்சிகள் மற்றும் கிறிஸ்துமஸ் கேக் வெட்டுதல் நிகழ்வுகள் இடம்பெற்றன. கூட்ட இறுதியில் சகோ. ஜார்ஜ்குட்டி பெருமனா அவர்கள் அனைவருக்கும் நன்றி கூறினார்.

நெட்டா புனித தோமையார் கிளைச் சபையைச் சார்ந்த ஒருவருக்கு ரூ. 5000, ஆறுகாணி புனித குழந்தை தெரசா கிளைச்சபையில் ஒருவருக்கு ரூ. 25,500 மற்றும் அதே சபையைச் சார்ந்த மற்றொரு நபருக்கு ரூ. 6000 என உதவித் தொகைகள் வழங்கப்பட்டன.

### *பிலாங்காலை வட்டாரச் சபை*

13.12.2020 ஞாயிறன்று மாலை 3.30 மணியளவில் பிலாங்காலை வட்டார சபை ஆன்மீக ஆலோசகர் அருட்தந்தை தோமஸ் தெக்கேத்தல அவர்கள் தலைமையில் கிறிஸ்துமஸ் விழா கேக் வெட்டி கொண்டாடப்பட்டது. சிறப்பு விருந்தினராக மத்திய சபையின் உறுப்பினர் சகோ. எட்வின்சன் அவர்கள் வருகை தந்தார். கூட்டம் மாலை 5.30 மணிக்கு நிறைவடைந்தது.

20.12.2020 ஞாயிறன்று காட்டாத்துறை புனித மிக்கேல் ஆண்கள் கிளைச்சபை மற்றும் புனித டோமினிக் சாவியோ பெண்கள் கிளைச்சபை இணைந்து அருட்தந்தை அலெக்ஸ் அவர்கள் தலைமையில் மாலை 4.30 மணிக்கு கிறிஸ்துமஸ் விழா கேக் வெட்டி கொண்டாடப்பட்டது. ஏழைகள் மற்றும் தத்து குடும்பத்தினருக்கு அரிசி, சேலைகள், கேக் வழங்கப்பட்டது. பின்னர் நோயாளிகள மற்றும் படுக்கை நோயாளிகளை வீடுகளில் போய் சந்தித்து செபித்து உதவிகள் வழங்கப்பட்டன.

27.12.020 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 9.30 மணிக்கு பரைக்கோடு புனித அந்தோணியார் ஆண்கள் கிளைச்சபையில் அருட்தந்தை ஜோண்சிலால் அவர்கள் தலைமையில் கிறிஸ்துமஸ் விழா கேக் வெட்டிக் கொண்டாடப்பட்டது 5 ஏழைக்குடும்பங்களுக்கு தலா 1000 வீதம் வழங்கப்பட்டது. மேலும் தத்து குடும்பங்கள் ஐந்திற்கு ரூபாய் 3000 வீதம் 15000 ரூபாய் வழங்கப்பட்டது.

**தகவல் சேகரிப்பு**
**சகோ. ஷாஜி**

# கன்னியாகுமரி சமூக சேவை சங்கம்

Kanyakumari Social Service Society

## பகிர்வு கிறிஸ்துமஸ்

கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தின் பணியாளர்களின் கிறிஸ்மஸ் கொண்டாட்டம் டிசம்பர் 23 தேதி KKSSS வளாகத்தில் நடைபெற்றது

கிறிஸ்துமஸ் விழாவானது KKSSS தலைவர் மற்றும் தக்கலை மறைமாவட்ட குருகுல முதல்வர் பேருட்தந்தை தோமஸ் பவ்வத்துபறம்பில் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. KKSSS ன் இயக்குநர் தந்தை தோமஸ் செபஸ்தியான் அவர்கள் சிறப்பு விருந்தினர்களை வரவேற்று பேசினார். பேருட்தந்தை தோமஸ் பவ்வத்துபறம்பில் அவர்கள் கிறிஸ்துமஸ் செய்தி கூறினார். அப்போது கிறிஸ்துமஸ் விழாவானது நம் ஒவ்வொருவருக்கும் கடவுள் மகிழ்ந்தளித்த மற்றொரு பரிசு இதனை ஏற்றுக்கொண்டு நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் வாழ்த்து சொல்ல வேண்டிய நேரமிது. கொண்டாட்டங்கள் உயிர் பெற வேண்டுமானால் நாம் மகிழ்ச்சியுடன் கொண்டாடவேண்டும.



ஏழைகளுக்கு காட்சியளிப்பவராய், ஏழ்மையின் கோலமாய், தாழ்மையின் வடிவாய் கிறிஸ்து பிறந்தார். ஏழை, பணக்காரன், ஆண்டான், அடிமை, ஆண், பெண், வெள்ளை, கருப்பு, சாதி, இனம், மொழி, என பிரிவினைகளும் வன்முறைகளும் உருவாகாமல் அனைவரும் பகிர்ந்து வாழ கிறிஸ்துமஸ் பேருதவியாக இருக்கட்டும் என்று அவர் வாழ்த்தினார். திருமதி பிறேமா அவர்கள் நன்றி கூறினார். இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக அருட்தந்தை ரோபின்ஸ் குழிக்கோடில் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். இதில் பணியாளர்கள் மற்றும் அலுவலக நண்பர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### *“வர்ணம் 2020”*

குழந்தைகளின் ஓவியத்திறமையை வெளிக்கொணர குழந்தைகள் தினத்தைபொட்டி கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தால் மாவட்ட அளவிலான ஓவியப் போட்டி மற்றும் சுவரொட்டி வடிவமைத்தல் போட்டி ஒவ்வொரு வருடமும் நடைபெறும். இந்த வருடம் கொரோனா பெரும் தொற்று காரணமாக போட்டி தக்கலை மறைமாவட்ட மறைக்கல்வி மாணவர்களுக்காக நடத்தப்பட்டது “வர்ணம் 2020” நவம்பர் மாதம் 15 - ம் தேதியன்று நடைபெற்றது.

தேவையற்ற பொருட்களிலிருந்து கொரோனா உருவம் செய்தல், ஓவியப்போட்டி மற்றும் சுவரொட்டி வடிவமைத்தல் ஆகியவை வயதின் அடிப்படையில்

**COLOURING**

| Sl.No | Prize | Name | Parish |
|---|---|---|---|
| 1 | I | JINO | PILANKALAI |
| 2 | 11 | JOMOL M.P | PALUKAL |
| 3 | 111 | ROSHIA | VARUTHATTU |

**COLLASH**

| Sl.No | Prize | Name | Parish |
|---|---|---|---|
| 1 | I | R.RITHIK ROSHAN | KATTATHURAI |
| 2 | 11 | AMAL .M.MANDUM | NAGERCOIL |
| 3 | 111 | S.R.ASHMI | BENGIRI |

**PENCIL DRAWING**

| Sl.No | Prize | Name | Parish |
|---|---|---|---|
| 1 | I | A.AFFACKMON | CHENNAMCODE |
| 2 | 11 | PRABIN.D. | PALLIKONAM |
| 3 | 111 | J.BEAUTLIN .BERIA | CHENNAMCODE |



மூன்று பிரிவுகளாக நடைத்தப்பட்டது. போட்டியில் 45 ஆலயங்களிலிருந்து 1045 மாணவ, மாணவிகள் பங்கேற்றனர். பங்கு பெற்ற மாணவர்களுக்கு பிரிவு வாரியாக முதல் மூன்று இடங்களுக்கு பரிசு வழங்கப்பட்டது. போட்டியில் அதிக மாணவர்கள பங்கு பெற்ற பங்கு தளங்களுக்கும் பரிசு வழங்கப்பட்டது. இந்நிகழ்வை Educare ஒருங்கிணைப்பாளர் அருட்சகோதரி மெரின் ரோஸ் ஒருங்கிணைத்தார்.

## புற்றுநோய் விழிப்புணர்வு மற்றும் பாதுகாப்பு

கல்லுவிளை, கன்னியாகுமரி சமூக சேவை சங்கம் சார்பில் புற்று நோய்க்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி அதங்கோடு, சேனங்கோடு மற்றும் பிலங்கரை பகுதிகளில் டிசம்பர் 2,14,21 ஆகிய தேதிகளில் நடைபெற்றது .



"எழுவோம் இயக்கம்" என்ற தலைப்பில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் கள ஒருங்கிணைப்பாளர் திரு. ராஜ சேகர் அவர்கள் தலைமையில் குறிப்பிட்ட மையங்களில் நடைபெற்றது. புற்று நோயை எவ்வாறு தடுக்க முடியும் என்பதையும் புற்று நோயின் வகைகள் பற்றியும் கூறப்பட்டது. மார்பகப்புற்று நோய், கல்லீரல் புற்றுநோய், நுரையீரல் புற்றுநோய், கருப்பை மற்றும் கருப்பை வாய் புற்றுநோய், இரத்த புற்றுநோய், பற்றி மிக தெளிவாக எடுத்துரைக்கப்பட்டது. புற்றுநோய் வரும் முன் எப்படி காப்பது மற்றும் நோய் பாதித்த நபர்களுக்கு மருத்துவ மற்றும் மனநல பாதுகாப்பு அளிப்பது பற்றியும் கூறப்பட்டது.

இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சியில் பல மையங்களை சார்ந்த சுய உதவிக்குழு மகளிர் கலந்து கொண்டனர். இந்நிகழ்வை களஒருங்கிணைப்பாளர் திரு. அஜின் தலைமையில் மையத்தின் களப்பணியாளர்கள் ஒருங்கிணைத்தார்கள்.

**அருட்தந்தை எபி பூவத்துமூட்டில், இயக்குநர்**

# மறைவட்டச் செய்திகள்

## நித்திரவிளை மறைவட்டம்

### புனித ஜார்ஜியார் திருத்தலம் – முஞ்சிறை

08.12.2020 அன்று அமலோற்பவ திருநாள் சிறப்பாக கொண்டாடப்பட்டது. மாலை 5.30 மணிக்கு ஆடம்பர திருப்பிலியும் தொடர்ந்து ஜெபமாலை பவனியும் நடைபெற்றது. அனைத்து மக்களும் கரங்களில் மெழுகுதிரி ஏந்தி மிகுந்த பக்தியுடன் ஜெபமாலை பவனியில் கலந்து கொண்டு அருள்பெற்று இல்லம் திரும்பினர்.

20.12.2020 அன்று காலை மறைக்கல்வி மாணவர்களுக்கான திருப்பலிக்குப்பின் 11 மணியளவில் கிறிஸ்துமஸ் விழா கொண்டாடப்பட்டது. மாணவர்களின் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. அதனைத் தொடர்ந்த அருட்தந்தை அவரகள் கிறிஸ்துமஸ் கேக் வெட்டி வாழ்த்தி செய்தி வழங்கினார்கள். ஆசிரியர் வின்செண்ட் ராஜ் அவர்கள் பேசும் போது, கிறிஸ்துமஸ் விழா பகிர்வின் விழா, அன்பின் விழா என்ற கூறினார். தொடர்ந்து அவர், ஆகையால் நாம் ஒருவரையொருவர் அன்பு செய்து நம்மிடம் உள்ளதை பிறருக்குப் பகிர்ந்து இனிய கிறிஸ்துமஸ் விழா கொண்டுவோம் என்றார். பின்னர் மாணவ மாணவியர் தங்கள் கிறிஸ்துமஸ் நண்பர்களுடன் பரிசுகளை பகிர்ந்து கொண்டனர். இறுதியில் ஆசிரியர் மனோஜ் அனைவருக்கும் நன்றி கூற பாப்பரசர் கீதத்துடன் விழா இனிது நிறைவுற்றது.

24 ஆம் தேதி இரவு 11 மணிக்கு கிறிஸ்து பிறப்பு விழா ஆராதனையும் திருப்பலியும் பவனியும் நடைபெற்றது. பின் மறைக்கல்வி மாணவர்கள் சார்பில் கிறிஸ்துமஸ் மரவிழா நடைபெற்றது. அனைவரும் கலந்து கொண்டு சிறுப்பித்ததோடு அனைவருக்கும் இனிப்பும் வழங்கப்பட்டது.

28.12.020 அன்று மாசிலா குழந்தைகள் திருநாள் கொண்டாடப்பட்டது. காலை 7 மணிக்கு திருப்பலி நடைபெற்றது. 10 வயதுக்குட்பட்ட எல்லா குழந்தைகளுடன் பெற்றோர்கள் திருப்பலியில் கலந்து கொண்டு செபித்து இறையாசீர் பெற்றனர். திருப்பலி முடிவில் அருட்தந்தை அவர்கள் அனைத்து குழந்தைகளையும் செபித்து ஆசீர்வதித்து பரிசுப் பொருட்கள் வழங்கி சிறப்பித்தார்கள்.

புத்தாண்டு சிறப்பு ஆராதனையும் திருப்பலியும் 31.12.020 இரவு 11 மணிக்கு ஆரம்பித்து அதிகாலை 2 மணியளவில் நிறைவுற்றது. ஆராதனையை அருட்தந்தை அவர்கள் வழிநடத்தினார்கள். திருப்பலி நிறைவில் அனைவரும் புத்தாண்டு வாழ்த்துகளைப் பகிர்ந்ததோடு இனிப்புண்டு மகிழ்ந்தனர்.

### கிறிஸ்து அரசர் ஆலயம் – கிறிஸ்துராஜபுரம்

கிறிஸ்து பிறப்பு விழா திருப்பலி 24 ஆம் தேதி இரவு 10.20 மணியளவில் ஆரம்பமானது. ஆடம்பரத் திருப்பலி மற்றும பவனி நடைபெற்றது. இறுதியில் அனைவருக்கும் சிற்றுண்டி வழங்கப்பட்டது. அனைத்து இறைமக்களும் திருப்பலி மற்றும் நிகழ்வுகளில் பக்தியோடு கலந்து கொண்டு வாழ்த்துகளை கூறி இறையாசீர் பெற்றுச் சென்றனர்.

புதுவருட சிறப்புத் திருப்பலி மற்றும் ஆராதனை 31 ஆம் தேதி இரவு 10.30 மணிக்கு ஆரம்பமானது. அருட்தந்தை அவர்களால் ஆராதனை நடத்தப்பட்டது. பின்னர் ஆடம்பரத் திருப்பலி, தொடர்ந்து அனைவரும் புத்தாண்டு வாழ்த்து கூறி அன்பை பகிர்ந்து கொண்டனர்.

நித்திரவிளை மறைவட்டத்திற்கு உட்பட்ட அனைத்துப் பங்குகளிலும் கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு சிறப்புத் திருப்பலியும் ஆராதனையும் நடைபெற்றது. இறைமக்கள் அனைவரும் இறையாசீர் பெற்று வாழ்த்துக் கூறி மகிழ்ந்தனர்.

### அமல மரியா ஆலயம் – சீனிவிளை

சீனிவிளை அமல மரியா ஆலயத்தில் கிறிஸ்து பிறப்பு விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. 24 ஆம் தேதி இரவு 9 மணிக்கு மேதகு ஆயர் தலைமையில் சிறப்புத் திருப்பலியும் பவனியும் நடைபெற்றது. பங்குமக்கள் அனைவரும் மிகுந்த பக்தியோடு இறைவழிபாடுகளில் பங்கேற்று இறையாசீர் பெற்றுச் சென்றனர். புதுப்பிக்கப்பட்ட பங்குதந்தை இல்லம் ஆயர் அவர்களால் மந்திரிக்கப்பட்டது. இறுதியில் அனைவருக்கும் இனிப்பு பரிமாறப்பட்டது.

## சூசைபுரம் மறைவட்டம்

### சூசைபுரம் – புனித சூசையப்பர் மறைவட்ட ஆலயம்

மனுவுருவான வார்த்தையாம் இறைவனின் பிறப்புத் திருவிழாவை கொண்டாடும் விதமாக டிசம்பர் மாதத்தின் முதல் வாரத்திலேயே நட்சத்திரங்கள் போடப்பட்டு, ஆலய வளாகம் மின்னொளியால் அலங்கரிக்கப்பட்டது. கிறிஸ்து பிறப்பு விழாவினை முன்னிட்டு வின்சென்ட் தே பவுல் இயக்கம் சார்பாக உதவி தேவைப்படும் 30 குடும்பங்களுக்கு ரூ. 1000 மதிப்புள்ள பொருட்களும் குடும்ப வருமானத்தை பெருக்க வழிசெய்யும் பொருட்டு, உதவி தேவைப்படும் நான்கு பெண்களுக்கு ஆடுகளும் வழங்கப்பட்டன. பங்கு மக்கள் அனைவரும் இயற்கையை பேணும் விதமாகவும் பொருளாதார பயன் பெற்றுக்கொள்ளும் விதமாகவும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் மரக்கன்றுகள் வழங்கப்பட்டன.

கிறிஸ்துமஸ் தினத்தன்று கிறிஸ்துபிறப்பு சிறப்புத் திருப்பலிக்குப் பின்னர் உறவிய வாரியான பஜனைப் பாடல் போட்டி நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன. ஊரடங்கு காலத்தில் நடத்தப்பட்ட விவிலிய வாசிப்பு போட்டி, விசுவாசப் பயிற்சி விழா போட்டிகள் ஆகியவற்றிற்கான பரிசுகளும் வழங்கப்பட்டன. ஆலய அலங்காரம், வண்ண விளக்குகளால் அலங்காரம், குடில், கலை நிகழ்ச்சிகள் ஆகியவற்றை பங்கு இளையோர்கள் தலைமையேற்று நடத்தினார்கள். நோய் தொற்று காலத்தில் சிறப்பாக காத்த கடவுளுக்கு நன்றி கூறி மக்கள் நிகழ்வுகளில் பங்கேற்றனர்.

### கிறிஸ்து அரசர் ஆலயம் – பாலப்பள்ளம்

டிசம்பர் 1 முதல் 24 வரை நோன்பு கடைப்பிடிக்க அறிவுறுத்தப்பட்டது. முப்பதுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் புலால் உணவு தவிர்த்தனர். நோன்பு காணிக்கை ரூ.17,500 கிடைக்கப்பெற்றது.

18.12.2020 அன்று பங்கின் கைக்காரர்களுக்கான தேர்வு பொதுமன்றம் வழியாக

நடைபெற்றது. நான்கு பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டன.

25 நோன்பு நாட்களில் நடைபெற்ற திருப்பலியில் தினமும் பெரியவர்கள் உட்பட சுமார் 125 க்கும் அதிகமானோர் பங்கெடுத்தனர். இளையோர்கள் இணைந்து ஆலய வடிவில் புற்குடில் அமைத்தனர்.

கிறிஸ்துமஸ் சிறப்பு செயல்திட்டங்கள்

குடும்பத்திற்கு ஒரு நட்சத்திரம் என்னும் திட்டத்தில் சுமார் 75 குடும்பங்கள் பங்கெடுத்தனர். தினமும் திருப்பலியில் ஒரு விவிலிய வசனம் மனப்பாடம் செய்து ஒப்புவித்தல் போட்டி நடத்தப்பட்டது. கிறிஸ்துமஸ் நிகழ்வுகளை மையப்படுத்தி படம் வரைதல் போட்டி நடைபெற்றது. போட்டியில் பங்கேற்ற அனைவரின் படங்களும் ஆலய வளாகத்தை அலங்கரித்தன. வீடுகளில் குடில் அமைத்தல் போட்டி நடைபெற்றது. அருட்சகோதரிகள் வீடு வீடாகச் சென்று குடில்களை மதிப்பீடு செய்தனர். கிறிஸ்துமஸ் மரம் (ChristmasTree) போட்டி நடைபெற்றது. 5 குழுக்கள் பங்கேற்றன. கிறிஸ்துமஸ் தாத்தா மற்றும் பாடல் போட்டிகள் உறவியம் வாரியாக 23.12.2020 அன்று நடத்தப்பட்டது. அனைத்து உறவியங்களும் பங்கேற்றன.

24.12.2020 அன்று அனைத்து குடும்பங்களுக்கும் கேக் வழங்கப்பட்டது. திருப்பலிக்குப் பின்னர் வழங்கப்பட்ட இக் கேக்கை வீட்டில் வைத்து முறித்து உண்ண அறிவுறுத்தப்பட்டது. கேக் முறிக்கும் போது செபிக்க வேண்டிய செபமும் அச்சடித்து வழங்கப்பட்டது. கிறிஸ்துமஸ் திருப்பலி இரவு 11 மணிக்கு நடைபெற்றது. போட்டிகளில் பங்கேற்ற அனைவருக்கும் திருப்பலிக்குப் பின்னர் பரிசுகள் வழங்கப்பட்டன. 28.12.2020 அன்று மாசற்ற குழந்தைகள் தினம் திருப்பலி, சிறப்பு ஆசீர்வாத செபம் குழந்தை ஈசோவுக்கு பூச்செண்டு வழங்குதல் நிகழ்வு, சிறப்பு காணிக்கை பவனி ஆகியவற்றுடன் சிறப்பிக்கப்பட்டது. 5 குழந்தைகள் குழந்தை ஈசோ வேடமணிந்து வந்திருந்தனர். இது பார்ப்போர் மனதை குளிரச் செய்தது.

## மாங்கரை புனித வியாகப்பர் ஆலயம்

1.12.2020 தொடங்கி கிறிஸ்துமஸ் பஜனை நடைபெற்றது. 8.12.2020 அன்று அமலோற்பவ மாதா விழா திருப்பலி, நவநாள், புகழ்மாலை ஆகியவற்றுடன் சிறப்பிக்கப்பட்டது. கிறிஸ்துமஸ் திருப்பலி இரவு 10 மணிக்கு நடைபெற்றது. இளையோர் சார்பில் கேக் பகிர்தல் மற்றும் கிறிஸ்துமஸ் மரவிழா ஆகியவை நடைபெற்றன. 27.12.2020 அன்று திருக்குடும்ப விழாவினை முன்னிட்டு திருமணமாகி 1 வருடம் ஆனவர்கள் கவுரவிக்கப்பட்டார்கள். பங்குத்தந்தை அனைவரின் தலைகளிலும் கைவைத்து செபித்தார்.

## கிள்ளியூர் தேவ மாதா ஆலயம்

06.12.2020 அன்று பங்குப்பேரவைக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் popular mission தியானம் நடத்தும் அருட்தந்தை அவர்கள் வருகை தந்து தியானம் பற்றிய விளக்கங்களை அளித்தார். அதற்கான பொறுப்பாளர்களும் தேர்வு செய்யப்பட்டார்கள். 1.12.2020 தொடங்கி கிறிஸ்மஸ் வரை திருப்பலியில் பங்கேற்ற குழந்தைகள் அனைவருக்கும், அன்றாட திருப்பிலியில் பங்கேற்பதை ஊக்குவிக்கும் நோக்குடன்

பரிசுகள் வழங்கப்பட்டன. கிறிஸ்துமஸ் அன்று இளையோர் சார்பில் கிறிஸ்துமஸ் மரவிழா நடந்தது. இளையோரின் நடனங்களும் இடம்பெற்றன.

## படந்தாலுமூடு மறைவட்டம்

### தெற்றியோடு புனித பவுல் ஆலயம்

தெற்றியோடு புனித பவுல் ஆலயத்தில் கிறிஸ்துமஸ் விழா 24.12.2020 அன்று மாலை 7.30 மணியளவில் மறைக்கல்வி மாணவர்களின் கலைநிகழ்ச்சிகளுடன் ஆரம்பமானது. கலை நிகழ்ச்சிகள் 9.30 மணியளவில் நிறைவடைந்தது. இளையோர் சார்பில் உணவு விற்கப்பட்டது. உணவு வாங்க இயலாதோருக்கு இலவசமாக உணவு வழங்கப்பட்டது. திருப்பலி 10 மணிக்கு ஆரம்பமாகி 12.20 மணியளவில் முடிவடைந்தது. பின்னர் அனைவருக்கும் கேக் வழங்கப்பட்டது. சிறிய அளவில் வானவேடிக்கையும் நடந்தது.

## தக்கலை பிலாங்காலை மறைவட்டம்

### பரைக்கோடு கிறிஸ்து அரசர் ஆலயம்

தக்கலை பிலாங்காலை மறைவட்டத்திற்கு உட்பட்ட பரைக்கோடு கிறிஸ்து அரசர் ஆலயத்தின் கிறிஸ்து அரசர் திருவிழாவானது 3-12-2020 முதல் 6-12-2020 வரை மிக எளிமையான முறையில் நடைபெற்றது. திருவிழா நாட்களில் முதல் மூன்று நாட்கள் மாலை 5.30 மணிக்கு ஜெபமாலையும் தொடர்ந்து திருப்பலியும் அதனைத் தொடர்ந்து தியானமானது அருட்தந்தை. மிஜோ புத்தம்புரைக்கல் மற்றும் அருட்தந்தை.ஷோஜோ அவர்களால் நடத்தப்பட்டது. திருவிழாவின் கடைசி நாளான 6-12-2020 அன்று நமது தக்கலை மறைமாவட்டத்தின் மேதகு ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் தலைமையில் சிறப்புத் திருப்பலியும் நடைபெற்றது. அன்றைய தினம் 5 பிள்ளைகள் ஆயர் அவர்களால் முதல் திவ்விய நற்கருணையை பெற்றுக் கொண்டனர். ஆயர் அவர்கள் தனது உரையில் அன்னை மரியா கடவுளின் வார்த்தைக்கு தன்னை முழுமையாக அர்பணித்ததையும், அவருடைய ஜெப வாழ்வைப் பற்றியும் விளக்கி கூறினார்.

**தகவல் சேகரிப்பு: திருமதி ஸ்னேக லதா, திருமதி ஹேமா**

## ஓ கோவில்பட்டி புதிய மறைத்தூது தளத்தில் திருமுழுக்கு விழா

விருதுநகர் மாவட்டத்தில் ஓ கோவில்பட்டி என்னும் இடத்தில் அமைந்துள்ள புனித ஜோசப் மறைத்தூதுத் தளத்தில் 9 பேர் கிறிஸ்துமஸ் இரவில் திருமுழுக்கு பெற்றுக் கொண்டனர். மேலும் நான்கு பேர் முதல் திருவிருந்து பெற்றனர். இரு தம்பதியரின் திருமணம் முறைப்படுத்தப்பட்டது. திருப்பலியையும் அருளடையாள நிகழ்வுகளையும் பேரருட்தந்தை தாமஸ் பவத்துப்பறம்பில் அவர்கள் தலைமையேற்று நிறைவேற்றினார். அருட்தந்தை பீட்டர் கிழக்கேல் அவர்களின் அயராத உழைப்பின் பயன் இவை. அருட்தந்தை அவர்களுக்கு மறைமாவட்டம் சார்பில் மனமார்ந்த பாராட்டுக்கள்.

# கூரியா செய்திகள்

- குடுக்கச்சிவிளை பாத்திமா மாதா ஆலயம் புதுப்பிக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

## தென்காசி மற்றும் மதுரை மறைத்தூதுப்பணியாளர்களின் கிறிஸ்துமஸ் கூட்டம்

தென்காசி மறைத்தூது மையத்தில் கிறிஸ்துமஸ் கொண்டாட்டம் 12.12.2020 அன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் அனைத்து அருட்தந்தையரும் கன்னியரும் பங்கேற்றனர்.

மதுரை மறைத்தூது மையங்களில் பணியாற்றும் அனைவரையும் ஒன்றிணைத்து கிறிஸ்துமஸ் கொண்டாட்டம் 13.12.2020 அன்று தீபகம் புனித சாவறா ஆலயத்தில் வைத்து நடத்தப்பட்டது. மதுரையில் மறைத்தூதுப்பணிகளை ஒருங்கிணைக்கும் பொறுப்பை ஏற்றிருக்கும் அருட்தந்தை அனில் ராஜ் அவர்கள் தங்குவதற்காக புதூர் என்னும் இடத்தில் இல்லம் வாடகைக்கு எடுக்கப்பட்டுள்ளது. இதன் மந்திரிப்பும் அதே தினம் நடைபெற்றது.

## மஞ்சாலுமூடு புத்தாலயம் அர்ச்சிப்பு

கடந்த ஐந்து ஆண்டுகளாக கட்டப்பட்டு வந்த மஞ்சாலுமூடு குழந்தை தெரசா மறைவட்ட பங்கின் புத்தாலயமானது 21.12.2020 அன்று அர்ச்சிக்கப்பட்டது. அர்ச்சிப்பு நிகழ்வை ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் நடத்தினார். கூட்டுவழிபாட்டு நிகழ்வில் பேரருட்தந்தை தாமஸ் பவத்துப்பறம்பில், பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் மற்றும் பேரருட்தந்தை டினு கோட்டக்கப்பறம்பில் CMI, பேரருட்தந்தை அகஸ்டின் தலோடில் ஆகியோர் பங்கேற்றனர். அர்ச்சிப்பின் இறுதியில் பங்குதந்தை அகஸ்டின் தலோடில் மற்றும் அனைத்து பங்கு மக்களுக்கும் நல்லுள்ளங்களுக்கும் நன்றிகளை ஆயர் கூறினார். அன்றைய தினம் கொடிமரம் கற்சிலுவை ஆகியவையும் மந்திரிக்கப்பட்டன.

## கிறிஸ்தவ ஐக்கிய பேரவை கிறிஸ்துமஸ் கொண்டாட்டம்

கிறிஸ்தவ ஐக்கியப் பேரவையின் கிறிஸ்துமஸ் கொண்டாட்டம் 19, டிசம்பர் 2020 அன்று பேயோடு என்னும் இடத்தில் வைத்து நடைபெற்றது. நமது மறைமாவட்டத்தின் சார்பில் பேரருட்தந்தை தாமஸ் சத்தியநேசன் அவர்கள் பங்கேற்றார்கள்.

# பொதுநிலையினர் பேரவை

பொதுநிலையினர் பேரவைக் கூட்டம் 30.11.2020 அன்று மதியம் 2 மணிக்கு திரு. ஜாண் ஆசிரியர் தலைமையில் இயக்குநர் அருட்தந்தை வினு ஜோசப் அவர்கள் முன்னிலையில் படந்தாலுமூடு திருஇருதய ஆலய வளாகத்தில் வைத்து நடைபெற்றது. அன்றைய கூட்டத்தில் பொதுநிலையினர் பேரவையை பங்கு அளவில் மற்றும் மறைவட்ட அளவில் எவ்வாறு விரிவுப்படுத்த வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு மறைவட்ட அளவில் விழிப்புணர்வு கொடுக்கும் விதத்தில் பின்வரும் அட்டவணைப்படி பொறுப்பாளர்கள் நியமிக்கப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

| கருத்தரங்கு நடைபெறும் மறைவட்டம் | தேதி | நேரம் | பொறுப்பாளர் |
|---|---|---|---|
| ஆறுகாணி | 2021, ஜன. 10 | பிற்பகல் 2-4 | திரு. எபி தோமஸ் |
| களியல் | 2021, ஜன. 17 | பிற்பகல் 2-4 | திரு. ரமேஷ் |
| மஞ்சாலுமூடு | 2021, ஜன. 24 | பிற்பகல் 2-4 | திரு. விஜயராஜ் |
| நித்திரவிளை | 2021, ஜன. 31 | பிற்பகல் 2-4 | திரு. கிறிஸ்துதாஸ், திருமதி சினேகலதா |
| படந்தாலுமூடு | 2021, பிப். 2 | பிற்பகல் 2-4 | திரு. ராஜா |
| தக்கலை பிலாங்காலை | 2021, பிப். 14 | பிற்பகல் 2-4 | திரு. ஹெர்பர்ட் |
| குழித்துறை... | | | |

மேலும் பங்களவில் உறுப்பினர்கள் 3+2 என்னும் விகிதத்தில் ஆண் பெண் என, 5 பேருக்கு குறையாமல் இருக்க வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது. இதற்காக பங்குத்தந்தையர்கள் உறுப்பினர்களைத் தேர்வு செய்து மேற் குறிப்பிட்ட நாட்களில் அனுப்பக் கேட்டுக்கொள்வது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

இவண்

அருட்தந்தை வினு ஜோசப், இயக்குநர்

## BIRTHDAYS OF REV FATHERS

### BIRTH DAYS - JANUARY - 2021

| | |
|---|---|
| Fr. Ajin Jose | 17 |
| Fr. Saji Elembasserril | 17 |
| Fr. Luka Kollamparampil CMI | 17 |
| Fr. Toji Parambilparambil | 18 |
| Fr. Sanil Panthchirackal | 20 |
| Fr. Printo Kurias | 21 |
| Fr. Antony Chundelikkatt | 24 |
| Fr. Lijo Thekkel | 24 |
| Fr. Geo Choozhikunnel | 26 |
| Fr. Jomon Mangalamadom | 26 |

## FEAST DAYS OF REV FATHERS

### FEAST DAY - JANUARY - 2021

| | |
|---|---|
| Fr. Sanil Panthichirackal | 03 |
| Fr. Johnsilal Arackaparampil | 03 |
| Fr. Davis Karukappally CMI | 20 |
| Fr. Justin Cheruvelil | 20 |
| Fr. Mijo Puthenpurayil | 20 |
| Fr. Robin Kurumullil | 20 |
| Fr. Seby Manimalakandathil | 20 |

## Seeds-இன் கிறிஸ்துமஸ் விழா

மறைமாவட்ட மக்களின் பங்களிப்போடு செயல்பட்டு வரும் SEEDS என்னும் அமைப்பின் கிறிஸ்துமஸ் விழா 23.12.2020 மாலை 6 மணிக்கு மேதகு ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்கள் தலைமையில் முக்கூட்டுக்கல் இளங்குருமடத்தில் வைத்து நடந்தது. இந்நிகழ்வில் இளங்குருமட அதிபர் பேருட்தந்தை ஜோஷி குளத்துங்கல் அவர்களின் வரவேற்புரையும், SEEDS இன் தலைவர் Adv. ராஜா அவர்களின் நன்றியுரையும் இடம் பெற்றது. பொருளாளர் திரு. எட்வின்சன் வரவு செலவு அறிக்கையை சமரப்பித்தார். மேதகு ஆயர் தமது உரையில் இளங்குருமடத்திற்கு உதவி செய்கின்ற இவ்வியக்கம் வளர வேண்டும். இதன் செயல்பாடுகள் பொருளாதார உதவியோடு நின்றுவிடாமல் இறையழைத்தலை ஊக்குவிக்கவும் அதற்கான முயற்சிகளை மேற்கொள்ளவும் வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார். அருட்சகோதரர்களின் நிகழ்வுகளும் உறுப்பினர்களின் கலைநிகழ்வுகளும் இடம் பெற்றன. அன்று 6 பேர் உறுப்பினர்களாக தங்களை இணைத்துக் கொண்டனர். சுமார் 8 மணிக்கு இரவு உணவோடு நிகழ்வு முடிவடைந்தது. முன்னதாக சுமார் அரைமணி நேர செபம் நடந்தது.

## குடுக்கச்சிவிளை ஆலயம் புதுப்பித்தல்

அருட்தந்தை சுபின் புத்தன்புரைக்கல் அவர்கள் தலைமையில், குடுக்கச்சிவிளை பாத்திமா மாதா ஆலய மக்கள் ஆலயம் புதுப்பிக்கும் பணியை 10.12.020 அன்று ஆரம்பத்திருக்கிறார்கள். ஆலயத்தின் சில பகுதிகள் இடித்து மாற்றவும் அனுமதியைப் பெற்றிருக்கிறார்.

## ஆயர் அவர்களின் கிறிஸ்துமஸ் சிறப்புத் திருப்பலி

இந்த ஆண்டு ஆயர் அவர்கள் 24.12.2020 இரவு திருப்பலியை சீனிவிளை அமல மரியா பங்கிலும் பகல் திருப்பலியை வெள்ளாம்பி புனித மிக்கேல் அதிதூதர் மறைத்தூதுத் தளத்திலும் நிறைவேற்றினார்.

# அருட்தந்தை தோமஸ் தெக்கேல் அவர்களின் நினைவு தினம்

டிசம்பர் 14, 2020 அன்று மாங்குளம் ஆலயத்தில் வைத்து, மறைந்த அருட்தந்தை தோமஸ் தெக்கேல் அவர்களுக்கான நினைவுத் திருப்பலி, அருட்தந்தை பிரின்டோ குரியாஸ் அவர்களால் நிறைவேற்றப்பட்டது.

# தகவல்கள்

- குருக்களின் கூட்டம் : 2021 ஜனவரி மாதத்திற்கான குருக்களின் கூட்டம் மறைவட்ட வாரியாக நடைபெறும். நித்திரவிளை படந்தாலுமூடு மறைவட்டங்களுக்கானது 11.01.2021 அன்றும், சூசைபுரம், தக்கலை-பிளாங்காலை மறைவட்டங்களுக்கானது 12.01.2021 அன்றும் ஆறுகாணி, மஞ்சாலுமூடு, களியல் மறைவட்டங்களுக்கானது 14.01.2021 அன்றும் தென்காசி மறைத்தூது தளங்களுக்கானது 16.01.2021 அன்றும் நடைபெறும்.
- சீரோ மலபார் மறைத்தூது வாரம் : சீரோ மலபார் மறைத்தூது வாரம் 2021 ஜனவரி 6 முதல் 12 ஆம் தேதி வரை அனுசரிக்கப்படுகிறது. மிஷன் லீக் உறுப்பினர்கள் தனிக்கவனம் செலுத்தி இந்நிகழ்வை சிறப்பிப்பார்கள்.
- சீரோ மலபார் ஆயர் பேரவை : சீரோ மலபார் ஆயர் பேரவை 2021 ஜனவரி 11 முதல் 16 வரை இணையம் வழியாக மாலை 5 முதல் 7 மணிவரை நடத்தப்படுகிறது.
- வின்செந்திய துறவற சபையால் சிறப்பாக நடத்தப்பட்டு வரும், பங்குமக்களுக்கான பாப்புலர் மிஷன் தியானம் ஜனவர் 24 ஆம் தேதி தொடங்கி மறைமாவட்டத்தில் நடக்க இருக்கிறது. வெள்ளிவிழா ஆண்டின் சிறப்பு நிகழ்வான இதன் கால அட்டவணை கீழே தரப்பட்டிருக்கிறது.

| NO | PMR NO | DATE OF PMR | PARISH |
|---|---|---|---|
| 1 | 273 | JAN 24-29 | PARAICODE<br>பரைக்கோடு |
| 2 | 274 | JAN 24-29 | ANAYADI<br>ஆனையடி |

| | | | |
|---|---|---|---|
| 3 | 275 | JAN 31-FEB 5 | ATHENCODE அதன்கோடு |
| 4 | 276 | JAN 31-FEB 5 | KAZHUVANTHITTAI கழுவன்திட்டை |
| 5 | 277 | FEB 14-19 | KARODE காரோடு |
| 6 | 278 | FEB 14-19 | KILLIYOOR கிள்ளியூர் |
| 7 | 279 | FEB 21-26 | MUNCHIRAI முஞ்சிறை |
| 8 | 280 | FEB 21-26 | VARUTHATTU வாறுதட்டு |
| 9 | 281 | MAR 07-12 | PADANTHALUMOODU படந்தாலுமூடு |
| 10 | 282 | MAR 07-12 | CHENAMCODE சேனம்கோடு |
| 11 | 283 | MAR 21-26 | THAKKALIVILAI தக்காளிவிளை |

| வரவிருக்கும் நிகழ்வுகள் ஜனவரி 2021 | |
|---|---|
| 4 | மறைவட்ட முதன்மை தந்தையர் கூட்டம் |
| 11-16 | சீரோ மலபார் ஆயர் பேரவை |
| 28 | தமிழக ஆயர் பேரவை, மார்த்தாண்டம் |
| 31 | தொன் போஸ்கோ திருவிழா |

# BISHOP'S ENGAGEMENTS JANUARY 2021

| DATE | DAY | TIME | EVENTS |
|---|---|---|---|
| 1 | Fri | | Bishop's House |
| 2 | Sat | | Bishop's House |
| 3 | Sun | 09.00 am | Malaicode: First Holy Communion Qurbana |
| 4 | Mon | 10.00 am<br>11.30 am<br>03.00 pm | Nagercoil: Showroom Blessing<br>Curia Meeting<br>Forane Vicars' meeting |
| 5 | Tue | | Bishop's House |
| 6 | Wed | 06.30 am<br>06.00 pm | Bishop's House: First Holy Communion Qurbana<br>Bishop's House: Feast of Denha Celebration |
| 7 | Thu | | Bishop's House |
| 8 | Fri | 03.00 pm | Jubilee Magazine Committee and Irai arul Committee meeting |
| 9 | Sat | 02.00 pm<br>05.00 pm | Champakulam: Holy Qurbana<br>Catechism Online Seminar for Teachers |
| 10 | Sun | | Bishop's House |
| 11 | Mon | 10.00 am<br>02.00 pm<br>05.00 pm | Statutes Committee Meeting<br>Meeting with the Benefactor from Kerala<br>**Syro Malabar Synod Begins** |
| 12 | Tue | 10.00 am<br>05.00 pm | Statutes Committee Meeting<br>Syro Malabar Synod |
| 13 | Wed | 10.00 am<br>05.00 pm | Statutes Committee Meeting<br>Syro Malabar Synod |

| | | | |
|---|---|---|---|
| 14 | Thu | 10.00 am<br>05.00 pm | Statutes Committee Meeting<br>Syro Malabar Synod |
| 15 | Fri | 10.00 am<br>05.00 pm | Statutes Committee Meeting<br>Syro Malabar Synod |
| 16 | Sat | 10.00 am<br>05.00 pm<br>05.00 pm | Statutes Committee Meeting<br>Catechism Online Seminar for Teachers<br>**Syro Malabar Synod Ends** |
| 17 | Sun | | Bishop's House |
| 18 | Mon | 03.00 pm | Jubilee Central Monitoring and Animation committee Meeting |
| 19 | Tue | 10.00 am | Meeting with CMC Thuckalay |
| 20 | Wed | 10.00 am | Meeting FCC Provincial and Council |
| 21 | Thu | 06.00 pm | Mukootukal: Minor seminary |
| 22 | Fri | | Bishop's House |
| 23 | Sat | 05.00 pm | Catechism Online Seminar for Teachers |
| 24 | Sun | 09.30 am | Varuthattu: First Holy Communion Qurbana |
| 25 | Mon | 09.30 am | Panavilai: Marriage Qurbana |
| 26 | Tue | | Bishop's House |
| 27 | Wed | 09.30 am | Mylodu: Marriage Qurbana |
| 28 | Thu | 08.00 am | Marthandam: **TNBC** |
| 29 | Fri | 06.30 am | Paraicodu: Popular Mission Retreat |
| 30 | Sat | 05.00 pm | Catechism Online Seminar for Teachers |
| 31 | Sun | 07.00 pm | Netta: Holy Qurbana |

**Rev. Fr. Robin Jose, Bishop's Secretary**




12-12-2020 PRE CHRISTMAS
GATHERING WITH MISSIONARIES
THENKASI



13-12-2020
PRE CHRISTMAS GATHERING
MADURAI



13-12-2020 PRESBYTERY BLESSING &
MISSIONARIES MEETING,
PUTHOOR, MADURAI



16-12-2020
PARISH VISIT & HOLY QURBANA
PATHUKANI



23-12-2020
PRE CHRISTMAS GATHERING-
SEEDS - MINOR SEMINARY



17-12-2020 PRE CHRISTMAS
GATHERING FOR PRESBYTERIUM
SANGAMAM



17-12-2020, CRI CHRISTMAS
GATHERING - KALLUVILAI




27-12-2020 CONFIRMATION &
HOLY QURBANA- MARAPPADI

TCYM
CHRISTMAS
GATHERING
SOOSAIPURAM











25.12.2020
CHRISTMAS
HOLY QURBANA
CHEENIVILAI

**For Private Circulation Only**

IRAI ARUL, The Official Organ of the Diocese of Thuckalay
Published by: Fr. Joseph Santhosh for the Diocese of Thuckalay,
Bishop's House, Post Box No. 12, Thuckalay - 629175
Printed at: Pulari Offset Press, Thuckalay 629175, Ph. 04651-252570